சிறப்பு அமர்வு வழக்கு எண் : 220/2024

அ.சா : 1

பெயர் : சரவணன்

நாள் : 09.07.2025

**1, 3 குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

கலைஞர் காலனி மயிலாடுதுறை பேருந்து நிலையம் அருகில் உள்ளது என்றால் சரி. காவிரி நதிக்கு வடக்கில் உள்ள திருவழுந்தூர் தெற்கில் மாயவரம் என்றால் சரி. பெருமாள் கோவிலை சுற்றி நான்கு வீதிகள் தேரோடும் வீதிகளாக உள்ளன அவை சுமார் 600 அடி நீளமும் 50, 60 அடி அகலமும் உள்ளதாக இருக்கும் என்றால் சரி. அந்த சாலைகள் மெயின்ரோடாகவும் உள்ளது என்றால் சரி. பெருமாள் கோவிலிலிருந்து மேற்கில் 3 கிமீ தூரத்தில் மாப்படுகை உள்ளது. அது நூற்றுக்கணக்கான வீடுகள் உள்ள பெரிய பகுதி என்றால் சரி. தோப்பு தெரு காவிரி ஆற்றை ஒட்டி உள்ளது என்றால் ஆமாம். பெருமாள் கோவிலிலிருந்து வடபுறம் நீடூர் செல்லும் சாலையும் தென்புறம் மயிலாடுதுறை செல்லும் பாதையும் உள்ளது. கொத்த தெரு மயிலாடுதுறை பேருந்து நிலையத்திலிருந்து சுமார் 3 கிமீ தூரத்தில் உள்ளது. கதிரவனை வெட்டிய வழக்கு, கண்ணன் என்பவருடைய கொலை வழக்கு மற்ற இதர வழக்குகளில் நான் சாட்சியா என்றால் இல்லை. யார் யாருக்கு எப்போது என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது. அஜித் என்பவர் என் சித்தப்பா மகன். நான் கொடுத்த அசா 1 புகாரில் அஜித் என் நண்பர் என்று தான் சொல்லியுள்ளேன். அஜித்தும் நானும் வேறு வேறு குடும்பம். அஜித்திற்கு யார் யாருடன் என்ன பிரச்சனை பற்றி எனக்கு தெரியாது அதற்கு நான் போகமாட்டேன். அசா 1 புகாரில் நான் கைரேகை வைக்கும்போது 21.03.2024 அன்று காலை 6.30 –7.00 மணியிருக்கும். அசா1 புகாரில் கைரேகை வைக்கும்போது நான் நல்ல சுயநினைவுடன் தான் இருந்தேன். மயிலாடுதுறை அரசு

S. தொரை

மருத்துவமனைக்கு நான் ஆம்புலன்ஸில் 20.03.2024 அன்று 8-8.30 மணிக்கு போனேன். மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் ஒரு அரை மணி நேரம் இருந்தேன். எங்களுடைய உறவினர்கள் நிறையபேர் மருத்துவமனையில் கூடிவிட்டார்கள். அஜித் குமார் என்பவரின் பிரேதமும் மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டது. மருத்துவமனையில் இருந்து மயிலாடுதுறை காவல் நிலையம் ஒரு கிமீ தூரத்தில் உள்ளது. நான் சம்பவம் நடந்ததாக சொல்லும் இடம் போக்குவரத்து மிகுந்த அதிகளவில் வீடுகள் உள்ள பரபரப்பான பகுதியாகும். போலிசார் முதலில் மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு தான் வந்தார்கள். அங்கிருந்தவர்களை விசாரித்தார்கள். நான் தஞ்சை மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு போகும்போது என் மனைவியும் மாமியாரும் வந்தார்கள். அவர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெறும்போது என்னுடன் தான் இருந்தார்கள். போலிசார் வந்து என்னிடம் அசா 1 ல் கைரேகை வாங்கும்போது என் மனைவியும் உடனிருந்தார். நான் முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள நாய் எனக்கு சொந்தமான நாய். நாயை அழைத்து கொண்டு நண்பர் வீட்டிற்கு சென்றுவந்ததாக சொல்வதற்கும் அதை மேட்டிங் அழைத்து சென்று வந்ததாக சொல்வதற்கும் வித்தியாசம் உண்டு என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரில் நாயை மேட்டிங் விடுவதற்காக மாப்படுகை ரயில்வே கேட்டிற்கு அருகே அழைத்து சென்றதாக சொல்லியுள்ளானே என்றால் சாட்சி சொல்லியுள்ளேன் என்கிறார். அவ்வாறு குறிப்பிடப்படவில்லை என்றால் அது நான் கொடுத்த புகார் இல்லை என்றால் சரிதான். வெள்ளை நிற பல்சர் வாகனத்தில் சந்திரமோகன், சந்திரமௌலி உட்கார்ந்திருந்தனர் என்றும் அவர்கள் எங்கள் வாகனத்தை இடித்தார்கள் என்றும் வெள்ளை வாகனத்திற்கு பின்னால் வந்த சிகப்பு அப்பாச்சி வாகனத்தில் சதீஷ், ஸ்ரீராம் மற்றும் பாலாஜி

S.தமி

ஆகியோர் வந்தார்கள் என்றும் எங்கள் வண்டி மீது மோதியதால் நாங்கள் கீழே விழுந்துவிட்டோம் என்றும் அஜித் எழுந்து நின்றான் என்ற விவரத்தை புகார் மற்றும் வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன் அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல. புகார் கொடுத்த பிறகு போலிசார் என்னை ஒரு வாரம் வரை விசாரிக்கவே இல்லை. வந்தவர்கள் யார் யார் என்னை எந்தெந்த இடத்தில் என்னையும் அஜித்குமாரையும் வெட்டினார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை. நாகராஜன், சத்யசீலன் ஆகிய இருவரும் அவர்களிடமிருந்து அரிவாளை வாங்கி அஜித்தை வெட்டி தலையே துண்டாக எடுத்துவிட்டார்கள் என்றும் அதன்பிறகு நான் மேற்கே பார்த்து ஓட ஆரம்பித்து விட்டேன் என்றும் என்னை மகாவிஷ்ணு அஜித்குமார் ஆகியோர் எதிரே மறைத்தார்கள் என்றும் மோகன் தாஸ் கிழக்கே இருந்து மறைத்தார் என்றும் சுற்றி நான்கு புறமும் எதிரிகள் என்னை மறைத்தார்கள் என்றும் நான் எதிரே இருந்த வீட்டிற்குள் போய் கதவை மூடும்போது சதீஷ் கதவை மூடி என் வலது கை ஆட்காட்டி விரலை வெட்டிவிட்டார் என்ற விவரத்தை புகாரிலும் வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேன் அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல. முதல் விசாணையில் எதிரிகளை எனக்கு தெரியும் என்று சொல்லியுள்ளேன். அவ்வாறு நின்ற எதிரிகளை எப்படி எனக்கு தெரியும் என்ற விவரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன் சம்பவத்தன்று தான் தெரியும். அவர்கள் யார் என்று சம்பவத்தன்று மயிலாடுதுறையில் வைத்து தெரிந்து கொண்டேன். அருகில் இருந்து இரு சிறு பிள்ளைகள் ஆம்புலன்ஸிற்கு போன் செய்தார்கள் என்ற விவரத்தை புகாரிலோ வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் புகாரில் சொல்லியுள்ளேன். மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் நான்

S. [signature]

அனுமதிக்கபடும்போது மருத்துவரிடம் சம்பவம் யாரால் எப்படி எத்தனை மணிக்கு எங்கு நடந்தது என்று விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. யார் மருத்துவரிடம் சொன்னார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. ஆனால் என் முகத்தில் தையல் போட்டு தஞ்சைக்கு மேல் சிகிச்சைக்கு அனுப்பிவிட்டார்கள். நான் சம்பவத்தின்போது மதுவின் ஆதிக்கத்தில் இருந்தேன் என்று சொன்னால் சரியல்ல. நான் மது அருந்தி அதன் ஆதிக்கத்தில் இருந்தேன் என்று மருத்துவர்கள் குறிப்பிட்டிருந்தால் சாட்சி நான் குடிக்கவில்லை என்கிறார். புகார் எத்தனை பக்கங்கள் கொண்டது என்று எனக்கு தெரியாது. நான் ஒரு ரேகை வைத்தேன். நான் மேல் சிகிச்சைக்காக தஞ்சை மருத்துவமனைக்கு இரவு 11.30–12.00 மணியளவில் சென்றேன். நான் முதல் விசாரணையில் மயக்கத்தில் இருந்ததால் அனைத்து எதிரிகளின் பெயர்களையும் சொல்லவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். புகாரில் 10 பேர் பெயர்களை குறிப்பிட்டுள்ளேன். அதுபோல் 10 பேர் பெயர்கள் அந்த புகாரில் இல்லை என்றால் அது நான் கொடுத்த புகார் இல்லை. 20.03.2024 அன்று அஜித்குமாருடன் இருசக்கரவாகனத்தில் எந்த காரணத்திற்காகவும் மாப்படுகைக்கோ வேறு எங்குமோ செல்லவில்லை என்றும் அஜித்குமார் எங்கு வைத்து யாரால் எங்கு வெட்டுப்பட்டார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. வேறு எங்கோ மதுவின் ஆதிக்கத்தால் எனக்கு ஏற்பட்ட காயத்தை இந்த வழக்கு சம்பவத்தில் ஏற்பட்டதாக கலந்தாலோசணையின்பேரில் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் அழைத்து சென்றதாக சொல்லும் நாய் என்னானது என்ற விவரத்தை நான் புகாரிலும் விசாரணையிலும் சொல்லவில்லை. நான் ஓட ஆரம்பிப்பதற்கு முன்பே எனக்கு காயம் ஏற்பட்டுவிட்டது. எவ்வளவு தூரம் நான் ஓடினேன் என்ற விவரத்தையோ

S.தரன்

நான் புகுந்து ஓடியதாக சொல்லப்படும் வீட்டையோ போலிசாரிடம் நான் அடையாளம் காட்டினேன் அதை குறித்து கொண்டார்கள். சாட்சி மீண்டும் நேரில் சென்று அடையாளம் காட்டவில்லை என்கிறார். அஜித்குமாரின் ரத்தம் என்னுடைய உடைகளில் படவில்லை. சம்பவம் நடந்தது இரவு நேரம். எந்த வெளிச்சத்தில் எதிரிகளையும் அடையாளம் பார்த்தேன் என்ற விவரத்தை புகாரிலும் வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேன் அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளை எனக்கு அடையாளம் தெரியும் என்றும்அவர்கள் என்னையும் அஜித்குமாரையும் வெட்டினார்கள் என்று நான் சொல்வது பின் யோசனையின்பேரில் சில அமைப்பை சேர்ந்தவர்கள், கலைஞர் காலனியை சேர்ந்த எங்கள் உறவினர்கள், சட்ட ஆலோசகர்கள் துணையுடன் உற்பத்தி செய்யப்பட்ட வழக்கிற்கு ஏதுவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நானும் எங்கள் உறவினர்கள் தொடர்புடைய வழக்குகளிலிருந்தும் தப்பிப்பதற்காக குற்றம் சாட்டப்பட்ட நபர்களை வேண்டுமென்றே இந்த வழக்கில் சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல.

**2,4,9,10 குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

புகார் அசா 1 ல் திரும்ப வரும்போது நாயை வீட்டிற்கு அழைத்து வந்ததாக சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை ஆனால் நான் கொடுத்த புகாரில் உள்ளது. ஆனந்தராஜ் வீட்டிற்கு போய் வரும்போது நாயுடன் திரும்பி வந்த விவரத்தை நான் கொடுத்த மற்றொரு புகாரில் சொல்லியுள்ளேன். சாட்சி தஞ்சை மருத்துவக்கல்லூரியில் நான் மயக்க நிலையில் இருந்தேன் அப்போது என்ன எழுதிக்கொண்டார்கள் என்று தெரியவில்லை என்கிறார். DSP என்னை 6ம் தேதி விசாரித்தபோது சொல்லியுள்ளேன். நான் கொடுத்த புகாரில் வாகனத்தின் நம்பரை குறிப்பிட்டு சொல்லவில்லை என்ன வாகனம் என்று சொல்லியுள்ளேன்.

S.துரை

வந்த நபர்களை அடையாளம் தெரியும் என்று நான் குறிப்பிட்டு சொல்லியுள்ளேன். அசா1ல் நான் சொன்னபடி வண்டியின் பெயர் மற்றும் எதிரிகளின் பெயர் இல்லை என்றால் அது நான் கொடுத்த புகார் இல்லை. மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் நான் முதலுதவி சிகிச்சை பெற்றபோது போலிசார் வந்திருந்தார்களா என்று எனக்கு தெரியாது காரணம் நான் மயக்க நிலையில் இருந்தேன். 06.04.2024 அன்று DSP என்னை விசாரிக்கும் வரை யார் யார் வந்தார்கள் என்ற பெயர் விவரத்தை வேறு யாருடமும் சொல்லவில்லை. சம்பவம் நடந்த நாள் முதல் 6.04.2024 வரை வேறு எந்த போலிசாரும் என்னை விசாரிக்கவில்லை. நான் ஒளிந்த கொண்ட வீட்டில் சுமார் 10 நிமிடங்கள் இருந்தேன். 10 நிமிடம் கழித்து நான் வெளியே வரும்போது தான் என் நண்பர் வெட்டுப்பட்டு கிடப்பதை நான் பார்த்தேன். நான் வீட்டை விட்டு வெளியே வந்து பார்த்தபோது என்னை விரட்டிவந்த நபர்கள் அங்கில்லை. நான் புகாரில் சொன்னபடியோ முதல் விசாரணையில் சொல்லியுள்ளதுபோலவும் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

**5 முதல் 8 மற்றும் 11 குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு எப்போதாவது மது அருந்தும் பழக்கம் உள்ளது. அதுபோலத்தான் 20.03.2024 அன்று நான் மது அருந்தியிருந்தேன் என்றால் அது சரியல்ல. மருத்துவரிடம் சொல்லும்போது நான்கு அடையாளம் தெரியாத நபர்கள் என்னை தாக்கியதாக சொல்லியுள்ளேன். நான் கொடுத்த புகாரில் அடையாளம் தெரிந்த நபர்கள் தாக்கினார்களா அடையளாம் தெரியாத நபர்கள் தாக்கினார்களா என்று குறிப்பிட்டு சொல்லவில்லை. போலிசார் விசாரணையில் அந்த நபர்கள் பற்றிய வெளிப்படையான அங்க அடையாளங்களை நான் கூறவில்லை. நான் மயிலாடுதுறை மற்றும் தஞ்சாவூர் மருத்துவமனையில் இருக்கும் போது கலைஞர் காலனி உறவினர்கள வந்து பார்த்தார்கள் என்றால் சரிதான். கண்ணன் கொலை வழக்கு விவரங்கள் எனக்கு தெரியும். இந்த வழக்கின் 1ம் எதிரி கண்ணனின்

சகோதரர் என்றால் சரிதான். 8ம் எதிரி அஜித்குமார் கண்ணன் கொலை வழக்கு சாட்சியான செந்தில்குமாரின் மகன் என்றால் சரிதான். அசா2 முருகவேல் மகன் ஹரிஷ் என்பவர் கண்ணன் கொலை வழக்கில் 19ம் எதிரி என்றால் சரிதான். இந்த வழக்கின் சாட்சி 4 ராஜேந்திரன் என்பவரின் சகோதரர் ரஞ்சித் என்பவர்தான் கண்ணன் கொலை வழக்கின் 9ம் எதிரி என்றால் சரிதான். ஆனால் கொலை செய்தார்களா என்று எனக்கு தெரியாது. கண்ணன் கொலை வழக்கில் உள்ள சேவியர் மகன் அலெக்ஸாண்டர், ஜோசப் மகன் துரை இவ்வழக்கின் சாட்சியாக உள்ள அலெக்ஸாண்டரின் உறவினர் என்றால் சரிதான். இவ்வழக்கில் சாட்சி துரைக்கண்ணு கண்ணன் கொலை வழக்கில் 21ம் எதிரி என்றால் சரிதான் அது தெரியும். இந்த வழக்கில் சாட்சியாக உள்ள சுப்ரமணியன் மகன் தான் கண்ணன் கொலை வழக்கில் 8 ம் எதிரி சந்துரு மற்றும் 15ம் எதிரி கார்த்திக் என்றால் சரிதான். நான் சிகிச்சையில் இருக்கும்போது கலைஞர் காலனியில் உள்ள துரைக்கண்ணு குடும்பம் மற்றும் மற்றவர்கள் வந்து என்னை பார்த்தார்கள். கண்ணன் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் என்னை சந்தித்தார்கள் என்றால் சாட்சி என்னை பார்க்கவே இல்லை என்கிறார். அவர்கள் சந்தித்தார்கள் என்றாலும் வழக்கிற்காக நான் பொய்யாக சொல்கிறேன்எ ன்றால் சரியல்ல. அஜித்குமார் என்பவர் கண்ணன் கொலை வழக்கில் எதிரியாக உள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியும். நான் வளர்த்த அந்த லேப் இன நாய்களுக்கு மோப்ப சக்தி அதிகம் என்றால் சரிதான். நான் நாயை மடியில் வைத்திருந்தேன். எனது மது பான நாற்றம் தாங்கமுடியாமல் நாய் துள்ளிக்குதித்ததில் வண்டி நிலைதடுமாறி எதிர்புறம் வந்த அடையாளம் தெரியாத நான்கு நபர்கள் இயக்கிவந்த இருசக்கரவாகனத்தில் மோதிவிட்டது என்றால் அது சரியல்ல. கண்ணன் கொலை செய்யப்பட்டதற்கு பிறகு மயிலாடுதுறையை எங்கள் பகுதியில் உள்ளவர்கள் கட்டுப்பாட்டில் எடுத்துக்கொண்டு அராஜகம் செய்தோம் என்றால் அதனால் அடையாளம் தெரியாத நான்கு நபர்களுடன் மோதியுள்ளோம் என்றாலும் அந்த நான்கு நபர்கள் அரிவாளால் தாக்கியதில் எனக்கும்

S. Fr[illegible]

அஜித்குமாருக்கும் காயம் ஏற்பட்டது என்றால் அது சரியல்ல. கண்ணன் கொலை வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக அந்த வழக்கின் எதிரிகள் மற்றும் துரைக்கண்ணு குடும்பத்தினர், முருகவேல் குடும்பத்தினர் என்னை சந்தித்து கேட்டுக்கொண்டதால் நான் 5 முதல் 8, எதிரிகளை தொடர்பு படுத்தி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 5 முதல் 8, 11 எதிரிகளை தெரியும் என்று முதல் விசாரணையில் பொய் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் அசா 1 புகார் தஞ்சாவூர் மருத்துவமனையில் ஏற்படுத்தப்படவில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கையில் அதனை என்னால் தட்டச்சருக்கு [illegible] சொல்லப்பட்டு அவர் என் [illegible] ஆணையின் பேரில் தட்டச்சு செய்து [illegible] முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட [illegible]
மயிலாடுதுறை

சிறப்பு அமர்வு வழக்கு எண் : 220/2024
அ.சா :2
பெயர் : முருகவேல்
நாள் : 09.07.2025

**1, 3 குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இறந்துபோன அஜித்குமார் என் பக்கத்து வீட்டுக்காரர் ஒரே இனம். எனக்கு இரண்டு மகன்கள் அவர்கள் பெயர் ஹரிஷ், அஜய். போலிசார் என்னை 21 ம் தேதி விசாரித்தார்கள். முதல்விசாரணையில் எதிரிகளை தெரியும் என்று சொல்லியுள்ளேன் ஆனால் எவ்வாறு தெரியும் என்று சொல்லவில்லை. சம்பவத்தை பார்த்தபிறகு தான் எதிரிகளின் பெயர் தெரியும் அதற்கு முன்பாக தெரியாது. எதிரிகள் அனைவரும் எங்கள் பகுதியை சேர்ந்தவர்களோ என்னுடன் தொழில்புரிபவர்களோ அல்ல. எதிரிகளின் பெயரை யார் சொல்லி தெரிந்துகொண்டேன் என்றால் பசங்க சொல்லி தெரிந்து கொண்டேன். கலைஞர் காலனி ஆட்கள் சொல்லி தெரிந்து கொண்டேன். அந்த ஆட்கள் கண்ணன் கொலை வழக்கில் எதிரிகளா என்றால் ஊரில் உள்ள பசங்க. என் மகன் ஹரிஷ் கண்ணன் கொலை வழக்கில் ஒரு எதிரி என்றால் சரி. கண்ணனுக்கும் கதிரவனுக்கும் நடந்த சண்டையோ பற்றி மற்ற எந்த சண்டை பற்றியோ எனக்கு தெரியாது. என் மகன் ஹரிஷ் கண்ணனை கொலை செய்தாரா என்றால் இல்லை. பொய் வழக்கு போட்டுவிட்டார்கள். அவ்வாறு பொய் வழக்கு போட்டது சம்பந்தமாக நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. நான் பழவியாபாரம் பேருந்து நிலையத்தில் செய்துவருகிறேன். அந்த வகையில் எனக்கு போலிசார் நெருக்கமானவர்கள் என்றால் இல்லை. ஆரோக்கிய நாதபுரம் கும்பகோணம் ரோட்டில் மயிலாடுதுறை பேருந்து நிலையத்தில் இருந்து மூன்று கிமீ தூரத்தில் உள்ளது. முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள மார்ட்டின் என்பவரின் அப்பா பெயர் தெரியாது. வீட்டு விலசாம் தெரியும். கதவு எண் தெரியாது. மார்ட்டின என்ன வேலை செய்கிறார் என்று எனக்கு தெரியாது. மாப்படுகைக்கு நானும் மார்ட்டினும் சொந்த வேலையின் காரணமாக சென்று வந்ததாக சொல்லியுள்ள நிலையில் யாருக்கு சொந்தமான

வேலையின் காரணமாக சென்றேன் என்று சொல்லவில்லை என்றால் சரி. என்ன வேலையாக சென்றேன் என்றும் சொல்லவில்லை. பழ வியாபாரம் காலை மற்றும் மாலை 6.00-9.00 நேரத்தில் விறுவிறுப்பாக நடக்கும் என்றால் சரி. நானும் மார்டினும் எந்த இடத்தில் சம்பவத்தன்று சந்தித்தோம் என்று சொல்லவில்லை. நானும் மார்டினும் வந்த Hero splender வாகனம் யாருக்கு சொந்தமான வாகனம் என்று சொல்லவில்லை என்றால் சரி. சரவணனை எனக்கு எப்படி தெரியும் என்றால் எங்கள் தெருவை சேர்ந்தவர் எங்கள் இனத்தை சேர்ந்தவர். கலைஞர் காலனியில் 160 வீடுகள் உள்ளது. என்னென்ன வண்டியில் யார் யார் போனார்கள் என்றவிவரத்தை போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சொன்னேன். சரவணனும் அஜித்தும் போன வண்டியை அங்கு வந்தவர்கள் வண்டியை மோதி கீழே தள்ளி அஜித்தை வெட்டினார்கள் என்று முதல் விசாரணையில் சொல்லிய விவரத்தை போலிசார் விசாராணையில் அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல. பின்னாடியே சத்யசீலன், நாகராஜ் ஆகியோர் அரிவாளால் அஜித்தை தலையில் வெட்டினார்கள் என்றும், குறுக்கே தடுக்க வந்த சரவணனை ஐந்து பேர் வெட்டினார்கள் என்றும் முதல் விசாரணையில் சொன்ன விவரத்தை போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொல்லியுள்ளேன், யார் யார் யார் யாரை எந்தெந்த இடத்தில் வெட்டினார்கள என்ற விவரத்தை போலிசாரிடம் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சம்பவத்தின்போது என்னிடம் செல்போன் உள்ளது. என் பக்கத்து வீட்டுக்காரர் வெட்டுப்பட்டு கிடந்தபோது நான் போலிசாருக்கு தகவல் சொன்னேனா என்றால் இல்லை. அவர் உறவினருக்காவது தகவல் சொன்னேனா என்றால் இல்லை. வேறு வழியாக வீட்டிற்கு போய்விட்டேன். நான் வீட்டிற்கு போவதற்குள் கலைஞர் காலனியில் எல்லோருக்கும் விவரம் தெரிந்து விட்டது. எல்லோரும் மருத்துவமனைக்கு போனார்கள். நானும்போனேன். அங்கு போய் சரவணனை பார்த்தேன். போலிசார் அங்கு வந்துவிட்டாரகள். அப்போது நேரம் 9.30 மணியிருக்கும். போலிசார் வந்தார்கள் அங்குள்ளவர்களை விசாரித்தார்கள். அப்போது நான் முதல்

விசாரணையில் சொன்ன விவரத்தை போலிசாரிடம் சொன்னேனா என்றால் இல்லை. போலிசாரிடம் நான் சம்பவம் பற்றி விவரத்தை எப்போது சொன்னேன் என்றால் 21ம் தேதியன்று மாலை 3–4.00 மணியளவில் சொன்னேன். அதுவரை நான் சம்பவத்தை பார்த்தவிவரத்தையோ சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் பற்றி விவரத்தையோ யாரிடமும் சொல்லவில்லை. கண்ணன் கொலை வழக்கின் எதிரிகளும் அவரது உறவினர்களும் இந்த வழக்கில் சாட்சிகளாக காட்டப்பட்டுள்ளனர் என்றால் சரிதான். மஞ்சவாய்க்கால் எங்குள்ளது என்றால் மயிலாடுதுறை பேருந்து நிலையத்திலிருந்து திருவாரூர் ரோட்டில் 5, 6 கிமீ தூரத்தில் உள்ளது. எந்த வாகனத்தின் பதிவெண்களும் சொல்லவில்லை. என்னை யார் விசாரித்தார்கள் என்றால் இன்ஸ்பெக்டர், சப் இன்ஸ்பெக்டர் தான் என்னை விசாரித்தார். என்னுடைய உடைகளோ மார்ட்டின் உடைகளிலோ ரத்தகறை எதுவும் படியவில்லை அதை போலிசார் கைப்பற்றவில்லை. எங்கள் இனத்தை சேர்ந்த தெருக்காரான அஜித்தும் சரவணனும் வெட்டுப்படுவதை நானும் மார்ட்டினும் சத்தம்போட்டு அவரை காப்பாற்ற முயற்சிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சம்பவத்தின்போது மாப்படுகைக்கு போய் திரும்ப வரவில்லை என்றால் சரியல்ல. எனக்கு எந்த விவரமும் தெரியாது என்றால் சரியல்ல. நான் சொன்னவாறு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. என்னை 21ம் எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் எங்கள் தெருவில் வந்து விசாரித்தார்கள். இறந்து போன அஜித் அசா1 சரவணன் எனக்கு வேண்டப்பட்டவர்கள் என்பதாலும் கண்ணன் கொலை வழக்கில் எதிரிகளாக இருப்பவர்களை சாட்சிகளாக காட்டி எதிரிகளை மிரட்டி காரியம் சாதித்துக்கொள்ள வேண்டி சாதி சங்கத்தை சேர்ந்தவர்களும் கதிரவன் உறவுக்காரர்களும் சட்ட ஆலோசகர்களும் கலந்து பேசி சொல்லிக்கொடுத்தபடி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**2,4,9,10,குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் சுமார் அரை மணி நேரம் நடந்திருக்கும். அரை மணிநேரமும் நானும் என்னுடன் வந்த மார்ட்டினும் அங்கு தான் இருந்தோம். எங்களை

தவிர ஐந்து அல்லது ஆறு பேர் நின்று பார்த்துக்கொண்டிருந்தார்கள். வெட்டுப்பட்ட நபர்கள் என்னானார்கள் என்று எனக்கு தெரியாது. வீட்டிற்கு போய் எவ்வளவு நேரம் கழித்து அஜித் இறந்து போனார் என்ற விவரத்தை தெரிந்து கொண்டேன் என்றால் ஒரு மணிநேரம் கழித்து தான் தெரிந்து கொண்டேன். ஒரு மணிநேரம் கழித்து எனக்கு விவரம் தெரிந்த பிறகு மருத்துவமனைக்கு சென்றேன். மயிலாடுதுறை மருத்துவமனைக்கு சென்றபோது மயிலாடுதுறை போலிசார் அங்கு இருந்தார்கள். அப்போது என்னிடம் யாரும் எந்த விவரமும் கேட்கவில்லை நானும் சொல்லவில்லை. சம்பவத்தை பற்றியும் சரவணன் காயமடைந்தவிவரம் எனக்கு தெரியாது. சம்பவத்தை பற்றி தெரியும் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. காயம் பட்டவர்கள் எங்கே இருந்தார்கன் எந்த இடத்தில் சம்பவம் நடந்தது என்பதையும் நான் முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் அது சரியல்ல. இந்த எதிரிகளுக்கும் வழக்கு சம்பவத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**5 முதல் 8 மற்றும் 11ம் குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னை போலிசார் எங்கள் தெருவில் வைத்து விசாரித்தார்கள். சம்பவ இடத்தில் வைத்து விசாரிக்கவில்லை. எதிரிகள் சந்திரமௌலி, சத்யசீலன், நாகராஜ், சத்யநாதன், சதீஷ்குமார் ஆகியோரின் எங்கு வசிக்கிறார்கள் தந்தை பெயர் தெரியாது. போலிசார் விசாரணையிலும் மேற்படி விவரங்களை சொல்லவில்லை. போலிசார் விசாரிக்கும் வரை நானும் மார்ட்டினும் சம்பவம் நடந்ததை பார்த்ததாக சொல்லும் விவரத்தை வேறு யாரிடமும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எங்கள் தெருவில் ஜோசப் மற்றும் சேவியர் என்பவர் குடியிருக்கவில்லை. ஜோசப் மகன் துரை சேவியர் மகன் சேது ஆகிய இருவரையும் தெரியும். இவர்கள் இருவரும் மார்டினுக்கு சொந்தக்காரர்களா தெரிந்தவர்களா என்று தெரியாது. சேது, துரை ஆகியோர் கண்ணன் கொலை வழக்கில் என்

மகன் ஹரிஷ் உடன் எதிரிகளாக இருந்துவருகிறார் என்றால் சரிதான். இதன்காரணமாகத்தான் சேவியர், ஜோசப் தெரியாது என்றும் மேற்கண்ட இருவரும் மார்டின் உறவுக்கார் என்பதை மறைத்து பொய்யாக சாட்சியும் அளிக்கிறேன் என்றால் சரியடல்ல. சத்யநாதன், சந்திரமௌலி, ~~சதீஷ்,~~ நாகராஜன், சத்யசீலன் ஆகியோரை சம்பவத்திற்கு முன் எனக்கு தெரியாது. போலிசார் விசாரணையில் எதிரிகளின் அங்க அடையாளம் பற்றி நான் சொல்லவில்லை அவர்களும் கேட்கவில்லை. மேற்கண்ட எதிரிகளை தெரியும் என நீதிமன்றத்திடல் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இறந்து போன அஜித்குமார் எனக்கு சிறு வயது முதலே தெரியும். அஜித்குமார் தாக்கப்பட்டதை நேரடியாக பார்த்ததாக கூறும் நான் சத்தம் போட்டு காப்பாற்ற முயற்சிக்கவில்லை, பார்த்துவிட்டு நேரடியாக வீட்டிற்கு வந்துவிட்டேன். நான் முதல் விசாரணையில் சொன்னபடி சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சொன்ன இடத்தில் அஜித்குமார் மற்றும் சரவணன் காயமடைந்ததாக கூறும் எந்த நிகழ்வையும் நான் பார்க்கவில்லை என்றாலும் வழக்கிற்காக என் மகன் ஹரிஷ் மற்றும் எங்கள் தெருவை சேர்ந்த கண்ணன் கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட நபர்களை காப்பாற்றவேண்டும் என்ற எண்ணத்தில் ஒரு சாட்சியாக போலிசாரால் உருவாக்கப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. மருத்துவமனையில் சென்று பார்த்தபோது கலைஞர் காலனியை சேர்ந்த தேவதாஸ், கஜேந்திரன், முத்து, பிரபாகரன், சுப்ரமணியன், பக்கிரிசாமி குடும்பத்தினரும் அங்கிருந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி நபர்களின் மகன்களும் கண்ணன் கொலை வழக்கில் எதிரிகளாக உள்ளார்கள் என்ற விவரம் தெரியும் என்றாலும் கண்ணன் கொலை வழக்கில் இருந்து தப்பித்து கொள்வதற்காகத்தான் எதிரிகளை தொடர்பு படுத்து பொய்

சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நானும் 5 முதல் 8 எதிரிகளை சம்பவ இடத்தில் பார்த்ததாக தொடர்புபடுத்தி பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

9/7/25

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

சிறப்பு அமர்வு வழக்கு எண் : 220/2024
அ.சா : 3
பெயர் : ஞானப்பிரகாசம்
நாள் : 09.07.2025

**1, 3 குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

மஞ்ச வாய்க்கால் கிராமம் திருவாரூ ரோட்டில் மயிலாடுதுறையில் இருந்து சுமார் 2 முதல் 3 கிமீ தூரத்தில் உள்ளது. நான் சாலையோரம் பழக்கடை நடத்தி வருகிறேன். அஜித்குமார் என் சொந்தகாரரா என்றால் இல்லை. அவர் பஸ் ஸ்டாண்டிற்கு வந்து போவதில் தெரியும் அதிக பழக்கம் இல்லை. அஜித் அண்ணன் ராஜ்குமார் பஸ் ஸ்டாண்டில் கடை வைத்திருந்தார். சரவணனை எனக்கு தெரியும். ராஜ்குமார் எனக்கு நல்ல பழக்கம் கிடையாது. வியாபாரரீதியாக பழக்கம். அவரும் பழக்கடை தான் வைத்திருந்தார். அவரும் ரோட்டுக்கடை தான் வைத்திருந்தார். புது பஸ் ஸ்டாண்டில் 100, 200 கடைகள் இருக்கும். எல்லோர் பெயரும் எனக்கு தெரியாது. நானும் அஜித்குமாரும் ஒரே இனத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரியல்ல. எதிரிகளை எந்த வகையில் தெரியும் என்ற விவரத்தை இதுவரை சொல்லவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கின் எதிரிகளின் அப்பா பெயர், படிப்பு, குடும்ப விவரம் எதுவும் எனக்கு தெரியாது, அவர்களின் வயதும் எனக்கு தெரியாது. மேற்படி எதிரிகள் யாரும் என்னுடன் படித்தவர்களும் அல்ல, உறவினரும் அல்ல, தெரிந்தவரும் இல்லை. என்னை வைத்து சிறையில் அடையாள அணிவகுப்பு நடத்தினார்களா என்றால் சாட்சி இல்லை என்கிறார். எதிரிகளின் பெயரை எப்போது தெரிந்து கொண்டேன் என்றால் சம்பவம் நடந்தபிறகு தான் தெரிந்து கொண்டேன். நிறைய நண்பர்களிடம் கேட்டு தெரிந்து கொண்டேன். யார் என்று குறிப்பிட்டு சொல்லமுடியாது. போலிசார் என்னை 21.03.2024 அன்று 11-12.00 மணிக்கு விசாரித்தார்கள். அவ்வாறு விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. போலிசாருக்கு

என்னுடைய கடை தெரியும் கடையில் வைத்து விசாரித்தார்கள். அப்போது என்னென்ன நிற வாகனத்தில் எந்தெந்த எதிரிகள் வந்தார்கள் என்ற விவத்தை நான் சொல்லியுள்னே். நான் முதல் விசாரணையில் குறிப்பிட்ட மாதவன் என்பவர் மங்கநல்லூரை சேர்ந்தவர். மயிலாடுதுறையில் இருந்து மங்கநல்லூர் எவ்வளவு தூரம் என்று எனக்கு தெரியாது. மாதவன் கொத்தனர் வேலை, வியாபாரம் பார்ப்பார், பெயின்டிங் வேலை பார்ப்பார். மாதவன் என்னுடைய நண்பர். நானும் மாதவனும் 20.03.2024 அன்று எங்கு எத்தனை மணிக்கு சந்தித்தோம் என்று குறிப்பிட்டு போலிசார் விசாரணையில் சொல்லவில்லை. யாருடைய வேலை காரணமாக நான் மாப்படுகைக்கு சென்றேன் என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். திருவழுந்துர் என்பது பெரிய பகுதி எத்தனை சாலைகள் உள்ளது என்று எனக்கு தெரியாது. போலிசார் விசாரணையில் அஜித் வந்த வாகனத்தை இடித்து தள்ளினார்கள் என்ற விவரத்தை சொன்னேனா என்றால் இல்லை. இடித்து தள்ளியதால் அந்த வாகனத்தில் ஏதேனும் சேதாரம் ஏற்பட்டதா என்றால் தெரியாது. அப்பாச்சியில் வந்த பாலாஜி, ஸ்ரீராம், சதீஷ் ஆகியோர் வெட்டியதாக நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அவன் சாட்சி சொல்லுவான் என்று சொன்ன விவரத்தையும் சரவணன் தோப்பு தெரு பக்கம் ஓடினான் என்று முதல் விசாணயையில் சொன்ன விவரத்தை போலிசார் விசாரணையில சொல்லவில்லை. யார் அடிபட்டாலும் நான் மருத்துவமனை சென்று பார்க்கமாட்டேன். அஜித்தை நான் பார்த்திருக்கிறேன் அதனால் நான் அவரை பார்க்க மருத்துவமனைக்கு போயிருந்தேன். சம்பவத்தின்போது நானோ மாதவனோ சத்தம்போட்டு அஜித்தை காப்பாற்ற முயற்சிக்கவில்லை என்றால் சரி. நான் உடனடியாக அஜித் சகோதரருக்கும் போன் செய்யவில்லை. 08.04.2024 அன்று பழக்கடையில் வந்து போலிசார்

என்னை விசாரித்தார்கள். 21ம் தேதியே நான் எங்கு வேலை பார்க்கிறேன் என்று கேட்டார்கள் நான் சொன்னேன். மருத்துவமனையில் நூற்றுக்கணக்கான மக்கள் இருந்தார்கள் எல்லோரிடமும் கேட்கவில்லை. சம்பவம் நடந்தவிவரத்தை நான் போலிசாரிடம் சென்று உடினடியாக புகாராக சொல்லவில்லை என்றால் சரி. நான் சம்பவ சாட்சியென்று போலிசாருக்கு தெரியாது. தெரியாமலேயே தான் என்னிடம் வந்து கேட்டார்கள். இறந்த போன அஜித்குமார் அவர் உறவினர்களுக்கு வேண்டப்பட்டவர் என்பதால் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சம்பவம் நடக்கவில்லை என்றாலும் எதிரிகளுக்கும் சம்பவத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

**2,4 , 9 ,10குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் கால் மணிநேரம் அல்லது அரை மணிநேரம் நடந்திருக்கும். சுமார் இருபது பேர் வேடிக்கை பார்த்திருப்பார்கள். சம்பவத்தில் ஒரு தரப்பினருக்கு மட்டும் தான் காயம். காயம்பட்ட யாரையும் நான் மருத்துவமனைக்கு அழைத்து செல்லவில்லை. நான் சம்பவ இடத்தில் இருக்கும்போதே போலிசார் வந்தார்களா என்றால் வரவில்லை. மருத்துவமனைக்கு நான் மறுநாள் சென்றேன். காயம் பட்ட நபர்களை யார் கொண்டு வந்து சேர்த்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் முதல் விசாரணையில் சொல்லிய விவரங்கள் அனைத்தும் பொய்யனவை என்றாலும் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்கள் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**5 முதல் 8 மற்றும் 11 குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சந்திரமௌலி, சத்யசீலன், நாகராஜன், ஆகிய நபர்களை சம்பவத்திற்கு முன்பு எனக்கு தெரியாது. அவர்களின் தந்தை பெயர் தெரியாது.

சத்யசீலன், நாகராஜ், சந்திரமௌலி ஆகியோர் சம்பவத்தில் ஈடுபட்டதாக போலிசாரிடம் அடையாளம் காண்பித்தேனா என்றால் இல்லை. கைதான பிறகு அடையாளம் காட்டினேன். எத்தனை நாட்களில் அடையாளம் காட்டினேன் என்றால் போலிசார் என்னிடம் போட்டோவை காண்பித்தார்கள் அதனடிப்படையில் தான் அடையாளம் காட்டினேன் என்றால் இல்லை. என் நண்பர்களிடம் கேட்டு தெரிந்து கொ்ணடேன் என கூறும் நான் என் நண்பர்களின் பெயர் விவரங்களை கூறமாட்டேன். நான் முதல் விசாரணையில் கூறியபடி சத்யசீலன், நாகராஜ், சந்திரமௌலி ஆகியோர் சம்பவத்தில் ஈடுபடவில்லை அதனால் தான் என்னால் உறுதியாக முன்வைத்து சாட்சியமளிக்க இயலவில்லை என்றால் சரியல்ல. சந்திரமௌலி என்பவர் இறந்துபோன அஜித்குமாரின் வாகனத்தை இடித்து தள்ளினார் என்ற விவரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். வழக்கிற்காக முதன்முறையாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தோப்பு தெரு சம்பவ இடத்திலிருந்து மேற்கு திசையில் உள்ளது. தோப்பு தெரு பக்கம் தான் சரவணன் ஓடினார் என நான் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் போலிசார் விசாரணையில் அஜித்குமார், மேற்கு புறத்தில் நின்றார் என்று சொல்லியுள்ளேன் கிழக்கு புறத்தில் நின்றார் என்று சொல்லவில்லை. அசா2 முருகவேல் என்பவரை எனக்கு 5 ஆண்டுகளாக தெரியும். அஜித்குமார் கொலை செய்யப்பட்டதாக நான் தெரிந்து கொண்ட விவரத்தை போலிசாரிடம் சொல்லும் வரை நான் யாரிடமும் சொல்லவில்லை. அசா 2 முருகவேல் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவரது மகன் ஹரிஷ் என்பவரை கொலை வழக்கில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க சம்பவத்தை பார்த்ததாக எதிரிகளை

அடையாளம் காண்பித்து சத்யசீலன், நாகராஜ், சந்திமெளலி ஆகியோரை அடையாளம் காண்பித்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு எனது ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

9/7/25

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

சிறப்பு அமர்வு வழக்கு எண் : 220/2024
அ.சா : 4
பெயர் : ஆனந்தராஜ்
நாள் : 09.07.2025

**1, 3 குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

20.03.2024 அன்று இரவு 12.00 மணிக்கெல்லாம் என்னை மயிலாடுதுறை போலிசார் என்னை விசாரித்தார்கள அதன்பின்னர் யாரும் என்னை விசாரிக்கவில்லை அதன்பிறகு 22ம் தேதியன்று விசாரித்தார்கள். நான் எத்தனை நாய் எத்தனை வகையான நாய்கள் வைத்துள்ளேன் என்று சொல்லவில்லை. மேட்டிங்கு நாயை அழைத்து வந்த நபரை எனக்கு தெரியாது. மேட்டிங் செய்யும் போது நானும் நாயை அழைத்து வந்த நபரும் மட்டும் தான் இருந்தோம். ஐயப்பன் என்பவர் வெளிநாட்டில் இருக்கிறார். அவர் மாப்படுகையை சேர்ந்தவர். மாப்படுகை முக்கியமான பகுதி என்றால் சரிதான். ஐயப்பன் என்பவர் எனக்கு போன் செய்து தகவல் சொன்னதாக முதல் விசாரணையில் பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அஜித்குமார் சரவணன் இருவரும் எனக்கு யார் என்று தெரியாது என்றும், அவர் என்னிடம் வரவில்லை என்றாலும் போலிசார் சொன்னபடி பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் நாய்களை வைத்து மேட்டிங் வேலை செய்யவில்லை என்றால் சரியல்ல.

மற்ற குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

R. ஆனந்தராஜ்

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

9/7/25

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

சிறப்பு அமர்வு வழக்கு எண் : 220/2024
அ.சா :5
பெயர் : வேலாயுதம்
நாள் : 09.07.2025

**1, 3 குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் வேலை பார்க்கும் பாரத் ஆட்டோ மொபைல் கடை தனியார் கடை என்றால் சரிதான். அந்த கடைகள் இரவு 9 மணிக்கு மேல் தான்மூடுவார்கள். அந்த கடை கச்சேரி ரோட்டில் ஐயப்பன் ஓட்டல் அருகே உள்ளது. திருவிழுந்தூர் தெற்கு வீதியில் இருந்து கச்சேரி ரோடு ஒன்றரை கிமீ தூரம் இருக்கும், திருவிழுந்தூர் தெற்கு வீதி சுமார் 600, 700 மீ உள்ள பெரிய சாலை அந்த சாலையின் மத்தியில் தெற்கு புறமாக தோப்பு தெரு உள்ளது. தோப்பு தெரு பிரியும் இடத்திலிருந்து திருவிழுந்தூர் மேல வீதிக்கும் இடையே சுமார் 350மீ தூரம் இருக்கும். இந்த தெற்கு வீதி கீழ வீதியில் சேரும் இடத்தில் நகராட்சி பள்ளி உள்ளது. நான் எங்கு நின்று பேசிக்கொண்டிருந்தேன் என்பதையும் நகராட்சி பள்ளி எங்குள்ளது என்பதையும் போலிசார் விசாரணையில் சொன்னதை குறித்துக்கொண்டார்களா என்றால் நினைவில்லை. ஒருவர் வெட்டுப்பட்டு கிடந்தார் அவர் அருகில் ஒரு வெள்ளை நாய் ஒன்று இருந்தது என்று விவரத்தை போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. தெற்கு வீதியில் படித்த மேல்நிலையில் உள்ள மக்கள் வசித்து வருகிறார்கள் என்றால் சரி. ஆம்புலன்ஸ் வரும்போது போலிசாரும் வந்துவிட்டார்கள். பிரரேத்தை போலிசார் ஆம்புலன்ஸில் ஏற்றி அனுப்பினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. 21.03.2024 அன்று போலிசார் என்னை விசாரித்தார்கள். 20.03.2024 அன்றுஎன்னை பார்த்தார்கள். நான் முதல் விசாரணையில் சொன்ன விவரங்கள் உண்மைக்கு புறம்பானவை என்றால் சரியல்ல. எனக்கு சம்பவத்தை பற்றி எனக்கு தெரியாது என்றால் சரியல்ல.

**5 முதல் 8, 11 குற்றம் சாட்டப்பட்ட நபர்கள்  தரப்பில் குறுக்கு விசாரணை**

மயிலாடுதுறை கலைஞர் காலனியை சேர்ந்த லோகநாதன் என்பவரை எனக்கு தெரியாது அவரிடம் நான் பேசியதில்லை பழக்கமும்இல்லை. 05.03.2025 அன்று என்னை குறுக்கு விசாரணையின் போது மயிலாடுதுறை கலைஞர் காலனியை சேர்ந்த லோகநாதனுடன் பேசிக்கொண்டிருப்பேன் என்று சொல்லியுள்ளோ என்றால் அவ்வாறு சொல்லவில்லை. லோகநாதன் என்பவர் தெரியும் என்ற விவரத்தை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 20.03.2024 அன்று நான் வீட்டில்இருந்ததாகவும் அப்போது காப்பாற்றுங்கள் காப்பாற்றுங்கள் என்று சத்தம் கேட்டு தாங்கள் பார்க்க வந்தபோது அவரை பத்து நபர்கள் துரத்தி வந்ததாகவும் என் வீட்டிற்குள் புகுந்து ஓடியதாகவும் லோகநாதன் கேட்டுக்கொண்டதற்கிணங்க முதல் விசாரணையில் பொய்யான சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மற்ற குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை